# செப்டம்பர் 13 - புனித கிறிசோஸ்தம் அருளப்பர் (344 – 407)

இவர் அந்தியோகியாவில் பிறந்தார். இவரது வாய்ச்சாலகத்தை முன்னிட்டு பொன் வாய் என்று பொருள்படும். கிறிசோஸ்தம் என்னும் பெயரை இவர் பெற்றார். மலைக்குச் சென்று இவர் தவவாழ்வு நடத்தினார். உடல் நலன் குன்றியமையால் இவர் அந்தியோக்கியாவுக்குத் திரும்பி வந்தார். இவர் கான்ஸ்தாந்தி நோப்பிள் நகரின் ஆயராகி திருச்சபையின் சிறந்த ஒளிகளில் ஒன்றானார். உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள் இவரை எதிர்த்தார்கள். குருக்களில் சிலரும் அலெக்சாண்டிரியா நகரின் பிதாப்பிதாவும் இவரை எதிர்த்தனர். இவருடைய மிக வல்லமை வாய்ந்த எதிரியான யுடோக்ஸியா பேரரசி இவருக்கு விரோதமாக அநேக குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்து இவரை நாடு கடத்தினாள். இவர் குக்குசஸ் என்னும் இடத்திற்குச் செல்லும் வழியில் மிக மிக துன்பப்பட்டு அந்த இடம் சேர்ந்த பின்பு ஆன்மாக்களின் மீட்புக்காக அங்கும் ஆர்வத்துடன் உழைத்தார். இவர் அப்போஸ்தரலான புனித சின்னப்பரை மிக மதித்து வந்தார். அவரைப் போல் இவர் துன்பப்பட நேர்ந்தது. அவரைப் போல் மகிழ்ச்சியுடனும் இருந்தார். தவறு செய்தவர்களை அவரைப் போல் கண்டித்தமையால் இவருக்கு பரலோக வாசம் கிடைத்தது. பாப்பானவர் இவருடைய நண்பராக இருந்தார். தம்மால் இயன்ற உதவிகளை எல்லாம் செய்தார். இவரை மேலும் துன்பப்படுத்த எதிரிகள் முயன்றனர். எனவே இன்னும் துாரமான இடத்திற்கு இவரை அனுப்பினார்கள். “அனைத்துக்காகவும் கடவுளுக்கு மகிமை உண்டாவதாக” என்று சொல்லிக் கொண்டு, போகிற வழியிலேயே 407-ஆம் ஆண்டில் இவர் இறந்தார்.




**சிந்தனை:** **“நம் ஆன்மாவுக்கு அமைதியளிக்க சிறந்த வழிகள் சாந்த குணமும், அடக்க ஒடுக்கமும்” (புனித கிறிசோஸ்தம்)**

**செபம்:** **ஆண்டவரே, எங்களுக்கு தாழ்ச்சியையும், சாந்த குணத்தையும் தாரும்.**